செ.வெ.எண் 675 நாள் 22-10-2007

<u>செய்தி வெளியீடு</u>

ஊனமுற்றோருக்காக சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்கள்/ஊனமுற்றோரில் சிறப்பாக பணிபுரிந்த நபர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள், 3.12.2007 அன்று கீழ்க்கண்ட மாநில விருதுகள்(State Awards) வழங்கப்படும்.

1. பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுள் சிறந்த பணியாளர்களுக்கான ஒவ்வொரு பிரிவிலும் ஒருவருக்கென மொத்தம் 5 விருதுகளும்,
2. பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்தல் மற்றும் கல்வி போதித்தமைக்கான சிறந்த ஆசிரியர்களுக்கான 5 விருதுகளும்,
3. பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் சிறந்த தொழிலதிபருக்கான ஒரு விருதும்,
4. ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை புரிந்த தொண்டு நிறுவனங்களில் சிறந்த நிறுவனத்திற்கான ஒரு விருதும்,
5. ஊனமுற்றோருக்கு சேவையாற்றிய ஒரு சமூகப் பணியாளருக்கு ஒரு விருதும்,

6. அனைவருக்கும் கல்வித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு ஒரு விருதும், ஆக மொத்தம் 14 விருதுகள் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் விவரங்கள், அந்தந்த மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலரிடமிருந்து அல்லது கீழ்க்கண்ட முகவரியிலிருந்து பெற்று, விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, புகைப்படத்துடன் 2 நகல்களை மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரின் பரிந்துரையுடனும் அனுப்ப வேண்டும். மாநில விருதுகளுக்காக விண்ணப்பிக்க கடைசி நாள் 10.11.2007. எனவே, விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9.

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,
15/1,மாதிரிப்பள்ளி சாலை, ஆயிரம் விளக்கு,
சென்னை 600 006.